பெயர்: .......................... தேதி: ..........................

# நான்கு நண்பர்கள்

அழகாபுரி என்ற கிராமத்தில் கந்தன், இராஜன், குகன், மணி, என்ற நான்கு நண்பர்கள் வசித்து வந்தனர். நான்கு நண்பர்களும் மிகுந்த அறிவாளிகள். எனினும் குகனின் அறிவினை அனைவரும் பாராட்டுவர். இதனால் மற்ற மூவரும் தங்களையும் அறிவாளிகள் என்று வெளிப்படுத்த விரும்பினர்.

ஒருநாள் நான்கு நண்பர்களும் காட்டு வழியே பயணம் செய்தனர். வழியில் சில எலும்புத்துண்டுகள் இருப்பதைக் கண்டனர். கந்தன் எலும்புகளை ஆராய்ந்து பார்த்து 'இவை சிங்கத்தினுடையது' என்றான். இராஜன் அந்த எலும்புகளை எல்லாம் ஒன்றாக இணைத்து உருவம் கொடுத்தான். உடனே மணி 'என்னால் இந்த சிங்கத்திற்கு உயிர் கொடுக்க முடியும் என்றான். 'மணி அவ்வாறு செய்யாதே! அது ஆபத்தில் முடியும்' என்று குகன் அறிவுரை கூறினான். அதற்கு மணி 'ஏன் உயிர் கொடுத்தால் என்ன? என்னுடைய அறிவையும் வெளிப்படுத்துவேன்' அதானே நீ மட்டும் தான் அறிவாளியா? என்று மணியின் செயலை மற்ற இருவரும் ஊக்குவித்தனர். குகன் எவ்வளவோ தடுத்தும் மூவரும் கேட்கவில்லை. மணி சிங்கத்திற்கு உயிர் கொடுத்ததும் சிங்கம் அசையத் தொடங்கியது. குகன் வேகமாக ஓடி மரத்தில் ஏறிக் கொண்டான். சிங்கம் மூவரையும் கொன்று தின்றது.

பெயர்: ..........................                                                    தேதி: ..........................

# பயிற்சிகள்

## 1. வினாக்களுக் கேற்ற விடையளி:

1. நான்கு நண்பர்களின் பெயரைக் கூறுக.

2. நண்பர்களின் ஊர் எது?

3. நான்கு நண்பர்களும் காட்டில் எதைக் கண்டனர்?

4. எலும்புகளுக்கு உருவம் கொடுத்தது யார்?

5. அறிவாளி என்று உணர்த்துவதற்கு மணி செய்தது என்ன?

## 2. சரியா ( ✓ ) தவறா ( x ) - குறியிடுக.

1. கிருஷ்ணகிரி என்ற கிராமத்தில் நான்கு நண்பர்கள் வசித்து வந்தனர். ◯
2. குகனின் அறிவை அனைவரும் வியந்து பாராட்டினர். ◯
3. காட்டில் கிடந்த எலும்புகள் கரடியினுடையது. ◯
4. நான்கு நண்பர்களும் எலும்புகளுக்கு உருவம் கொடுத்தனர். ◯
5. 'சிங்கத்திற்கு உயிர் கொடுக்க வேண்டாம்' என்று குகன் அறிவுரை கூறினான். ◯